
# வட்டாரத் திட்டங்களில் (Regional Projects) சபைகளும் சிறு குழுக்களும் (Cells) ஒத்துழைக்கின்றன

சிறுவர்களுக்குக் கற்பிப்போர் பாடம் I1b யை வாசிக்கவும

இஸ்ரவேலின் குலங்களை ஒருங்கிணைந்து எருசலேம் மதில்களை திரும்ப எடுப்பிக்க வைத்தார் நெகேமியா. ஒவ்வொரு குலத்துக்கும் ஒவ்வொரு பகுதியின் பொறுப்பு கொடுக்கப்பட்டது. அவர் முதலில் உடைப்பைப் பார்வையிட்டு திட்டம் தீட்டி பின் இராணுவ பாதுகாப்பை அளித்தார்.



## 1. ஜெபத்தாலும் தேவ வார்த்தையாலும் உங்களை ஆயத்தப்படுத்துங்கள்

“அன்பான தேவனே, இந்தப் பாடத்தைப் பயன்படுத்தி இந்த வட்டாரத்தில் உள்ள சபைகள் ஒன்றாகப் பணியாற்ற உத்வேகம் அளிப்பீராக.”

எருசலேம் நகருக்கு, முன்பு என்ன நடந்தது ஏன் நடந்தது என்பதை 2 நாளா 36:15-23 ல் காண்க.

70 ஆண்டுகளுக்குப் பிறகு பாபிலோனில் சிறைப்பட்டிருந்த இஸ்ரவேலர்கள் பெர்சிய இராஜா கோரேசின் உதவியால் தங்கள் சொந்த இடத்துக்கு திரும்பிப் போக ஆரம்பித்தனர். எருசலேம் மதிலைத் திரும்பக் கட்ட நெகேமியா ஆறு கட்ட முயற்சியைத் தொடங்கினார்.

**கட்டம் 1.** தேவையையும் நோக்கத்தையும் வரையறுத்தல்: நெகேமியா எருசலேமின் துன்பநிலை அறிந்து, எவ்வாறு உணர்ந்து நடந்து கொண்டார் என்பதை நெகேமியா 1 ஆம் அதிகாரத்தில் காண்க.

- எருசலேமின் அழிவுகளை குறித்து நெகேமியா முதலில் கேட்டு அறிந்து கொண்டார். தான் கேள்விப்பட்டதை குறித்து அவர் எவ்வாறு நடந்து கொண்டார்? (4)
- தனது நாட்டுக்கு மிகவும் துன்பத்தைக் கொண்டு வந்த தமது மக்களின் பாவங்களை நெகேமியா அறிக்கையிட்டார். யாருடைய பாவங்களை அவர் சேர்த்துக் கொண்டார்? (6)

**கட்டம் 2** உண்மைகளை ஆராயும்போது ஞானத்திற்காக ஜெபித்தல்: இஸ்ரவேல் மக்களுக்கு உதவி செய்ய நெகேமியா தம்மை எவ்வாறு ஆயத்தப்படுத்திக் கொண்டார் என்பதை நெகேமியா 2 ஆம் அதிகாரத்தில் காண்க.

**கட்டம் 3** நன்கு வறையறுக்கப்பட்ட பொறுப்புகளை பிரித்தளிக்கவும். அவரவர்களின் திறமைக்கு ஏற்றபடி பங்கு கொள்ள ஏதுவாக நெகேமியா ஒரு மாபெரும் பணியை பகிர்ந்து அளித்து நிர்வகித்தார்.

**கட்டம் 4:** எதிர்ப்புகளையும் அநீதிகளையும் உறுதியாகக் கையாளவும்.

- நெகேமியா எதிர்ப்பை எவ்வாறு சந்தித்தார் என்பதை நான்காம் அதிகாரத்தில் காண்க. (அவர் ஜெபித்தார். எல்லோரும் கடுமையாக உழைத்தனர். பலவீனமான பகுதிகளில் அவர் கவனம் செலுத்தினார். தேவனை நம்பி தங்கள் கடமைகளை ஆற்றுமாறு அவர் வேலையாட்களை வேண்டினார். அவரும் அவரது ஆட்களும் முழுமையான அர்ப்பணிப்புக்கு உதாரணமாகத் திகழ்ந்தனர்).
- இந்தக் கிறிஸ்தவத் தலைவர் எவ்வாறு தேவ மக்களுக்கு நீதியைக் கொண்டு வந்தார் என்பதை ஆம் அதிகாரத்தில் காண்க.
- எந்த அநீதியை நெகேமியாவும் மக்களும் சுயமாக முடிவுக்குக் கொண்டு வந்தனர்? (7 & 15).

**கட்டம் 5:** பொய்யையும் விமரிசனத்தையும் எதிர்த்து உறுதியாக நிற்கவும். நெகேமியா மற்றும் அவரது வேலையாட்களின் பொறுமை எவ்வாறு இத் திட்டத்தில் தேவனை மகிமைப்படுத்தியது என்பதை 6 ஆம் அதிகாரத்தில் காண்க.

- எதிரிகள் அறிந்து கவனத்தை சிதறடிக்காமலும், அச்சுறுத்திவிடாமலும் நெகேமியா தன்மை எவ்வாறு காத்துக்கொண்டார்? (11-14).
- மதில் 100 ஆண்டுகளாக உடைந்து கிடந்தன. தேவ உதவியால் எத்தனை நாட்களில் திரும்பக் கட்டப்பட்டது? (15)
- இஸ்ரவேலில் தேவனைப் பற்றி இது எதிரிகளுக்கு எதைக் கற்பித்தது? (16)

**கட்டம் 6:** முடிவுற்ற திட்டத்துக்கான மகிமையை தேவனுக்கு கொடுங்கள். தமது மக்கள் மேல் தேவன் பொழிந்த ஆசீர்வாதத்தை நெகே. 8:2-12, 9:1-5 ல் காண்க.

## 2. வரும் வாரத்தில் செய்ய வேண்டியவைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

தேவைகளுக்கும், அந்தந்தப்பகுதி பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற நடிவடிக்கைகளை தேர்ந்து எடுக்கவும்.

- வேறு இடங்களில் உள்ள சமுதாயம் மற்றும் சபைகளின் தேவைகளை அறிய கேள்விகள் கேட்கவும்.
- பிற மந்தைகளின் தலைவர்களை சந்திக்கவும். இணைந்து பணியாற்ற திட்டமிடுக. தேவைப்பட்ட இடங்களுக்கு உதவியை அனுப்புக.
- தேவனுக்காக ஒரு மாபெரும் திட்டத்தை நெகேமியாவின் திட்டபடி செயல்படுத்தி முடிக்கவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்


சூழ்நிலைக்கேற்ற செயல்பாடுகளை தெரிந்துகொள்க.

ஆராதனையின் போது ஜெபிக்கவும்: பாவங்களை தேவனிடம் அறிக்கை இடவும். பிறருடைய தேவைகளை உங்களுக்கு காட்டுமாறு வேண்டவும். அவருக்கு சேவை செய்ய பல மந்தைகளின் கிறிஸ்தவர்களை ஒன்றிணைக்குமாறு தேவனை வேண்டவும்.

மந்தைக்கு வெளியில் இருக்கும் மக்களின் தேவைகளுக்காக, சேவை செய்ய ஒன்றாக பணியாற்றிய கிறிஸ்தவர்களுக்காக தேவனை துதிக்கவும்.

நெகேமியாவின் கதையின் பகுதிகளைக் கூறலாம் அல்லது நடிக்கலாம். இந்தப் பாடத்தைப் பல வாரங்களுக்குத் தொடரலாம்.

நெகேமியா அதிகாரம் 1 & 2 ஐ கூறும் படி ஓர் உதவியாளரை ஆயத்தம் செய்க. தனது மக்களின் தேவைகளை அறிந்து அந்த பணிக்காகத் தன்னை ஆயத்தப்படுத்த நெகேமியா எடுத்துக் கொண்ட முயற்சிப்படிகளை முதலில் கேட்டு அறிந்து கொள்ளுமாறு முதலில் ஒவ்வொருவரையும் கேட்கவும். கதையைக் கூறியபின் அவர்கள் என்ன அறிந்து கொண்டார்கள் என்று விசுவாசிகளிடம் கேட்கவும் (பதில்கள் பகுதி 1 ல்).



தனது திட்டத்துக்கு எழுந்த எதிர்ப்பை நெகேமியா கையாண்ட விதத்தை நாடகமாக்கவும்.

**நெகேமியா:** "நமது நகரத்தின் மதிலை திருப்பிக்கட்ட தேவன் நமக்கு உதவுவார்."

**சன்பல்லாத்:** நெகேமியாவுக்குப் பின் மறைந்து வருதல். அவர் திடீரெனத் திரும்ப, கூறுகிறான். "வேலையை நிறுத்தும். இது உம்மால் முடியாதது."

**நெகேமியா:** "இதை முடிக்கும்படி தேவன் இதை எனக்குத் தந்தார். நீர் போய்விடும்."

**சன்பல்லாத்:** "உம்மால் வெற்றி பெற முடியாது. எங்களோடு வாரும். ஒரு முக்கியமான கூட்டத்திற்கு நீர் தேவை."

**நெகேமியா:** "நாங்கள் ஒரு மாபெரும் பணியை செய்து கொண்டு இருக்கிறோம். என்னால் நிறுத்த முடியாது. நான் கூட்டத்திற்கு போவதால் ஏன் இந்த பணி நிற்க வேண்டும்?"

**சன்பல்லாத்:** "இதற்காக நீர் அதிகமான அபாயத்தை மேற் கொள்கிறீர்."

**நெகேமியா:** "தேவன் எங்களைக் காப்பாற்றுவார்."

சிறுவர்கள் தாங்கள் தயாரித்த கவிதை, நாடகம் கேள்விகள் போன்றவற்றை பெரியவர்களுக்கு வழங்கலாம்.

நெகேமியா 2:1-5 ஐ வாசித்து கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும். நெகேமியா இராஜாவிடம் பானத்தை கொண்டு வந்தான். ஆனால் நாம் கர்த்தரின் பந்திக்கு வரும்போது நமது இராஜாவாகிய இயேசு பானத்தை நமக்கு கொண்டு தருகிறார். அவரது இரத்தம் நமக்கு பாவ மன்னிப்பையும், நமது இராஜாவாகிய தேவனோடு உறவையும் கொண்டு வருகிறது.

எந்தவிதமான எதிர்ப்புகளின் மத்தியிலும் இணைந்து தேவனுக்காக சேவை செய்ய மக்களை ஒருங்கிணைக்க ஜெபிக்கவும். (இந்த வாரத்தில் திட்டமிட்டுள்ள செயல்பாடுகளை அறிவிக்கவும்).

மனனவசனம் (சேர்ந்து) 2 நாளா 7:14.

ஜெபிக்கவும், பிற சபைகளோடு சேர்ந்து பணியாற்ற தேவையான திட்டங்களை உறுதிப்படுத்தவும், ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய குழுக்களாக அமர்ந்து ஒருவருக்கொருவர் உதவி செய்க.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net